செய்தி வெளியீடு எண்: 234 நாள்: 16.04.2013

# பத்திரிகை செய்தி

## மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி. த. செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் நல துறை அலுவலர்களின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இன்று (16.04.2013) சென்னை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய அலுவலகத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. சி. த. செல்லப்பாண்டியன் அவர்கள் தொழிலாளர் நலத் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வு செய்தார். கூட்டத்திற்கு தொழிலாளர் நலத் துறை செயலாளர் திரு. மோகன் பியாரே இ.ஆ.ப. , தொழிலாளர் நலத் துறை ஆணையர் டாக்டர். பி. சந்திரமோகன் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து பேசுகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிலாளர் நலத் துறை சிறப்பாக செயல்பட்டுவருகிறது. நீண்ட காலமாக மறுநிர்ணயம் செய்யப்படாத தொழில்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுவதற்கு தொழிலாளர் நலத் துறையினர், சிறப்பான ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். மாநிலத்தில் தொழில் அமைதி நிலவவேண்டும். தொழிலாளர் பிரச்சணைகளை சுமூகமான முறையில் தீர்த்து வைக்கவேண்டும். தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 17 தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் பயன்கள் உரிய பயனாளிக்கு சென்றடையவேண்டும். இதில் தனி கவனம் கொள்ளவேண்டும். கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் ரூ.318 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் 218 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழக முழுவதும் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத நிலையை உருவாக்கவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த பிறகு 17 தொழிலாளர் நல வாரியங்களில் நிலுவையில் விண்ணப்பங்கள் குறைந்தளவு தான் உள்ளன. சென்ற ஆட்சியில் நிலுவையிலிருந்த விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு உரிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அம்மா அரசு வழங்கியுள்ளது.

மாவட்ட தொழிலாளர் அலுவலர்கள் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மாதந்தோறும் சிறப்பு முகாம்களை நடத்தி பயனாளிகளை கண்கடறியவேண்டும். மாவட்டந்தோறும் நடத்தப்படும் முகாம்கள் எத்தனை 17 தொழிலாளர் நல வாரியங்களில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆய்வு செய்யப்படும் என்னும் தெரிவித்தார். தொழிலாளர் நலத் துறை சிறப்பாக செயல்பட்ட நல்ல பெயரினை அரசிற்கு ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. பி. கருப்பசாமி, தொழிலாளர் நலத் துறை இணை ஆணையர்கள் திரு.மாரிமுத்து, திரு. சோம்புராஜ், திருமதி. உமாதேவி, திரு. தங்கவேல், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியச் செயலாளர் திரு. ஆர். கே. ரவிசங்கர் மற்றும் துணை ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

<u>வெளியீடு:-</u>

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–9